**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சூலூர்</u>**

**<u>முன்னிலை: திருமதி.எம். சந்தோஷம்., பி.எஸ்.சி., பி.எல்.,</u>**

**<u>மாவட்ட உரிமையியல் நீதிபதி, சூலூர்</u>**

திருவள்ளுவர் ஆண்டு 2056 ஆண்டு விசுவாவசு வருடம், புரட்டாசி மாதம் 8 ம் நாள்

2025 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 24-ம் நாள் புதன்கிழமை

**<u>இடைநிலை மனு எண்.5/2025</u>**

**in**

**<u>அசல் வழக்கு எண். 67/2022</u>**

1. கீர்த்தனா தேவி ...**மனுதாரர்/ 3 ம் தரப்பினர்/ 6 ம் பிரதிவாதி**

//எதிர்//

1. A. ரத்தினம் ... **எதிர்மனுதாரர்/வாதி**

1. தமிழ்நாடு அரசுக்காக

வட்டாட்சியர், சூலூர் வட்டம்.

2. மாவட்ட ஆடசித்தலைவர்

கோயமுத்தூர் மாவட்டம்.

3. கௌரி

4. கோகிலா

5. ஜெயக்குமாரி (இறந்தநபர்) ...**எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்**

இந்த மனு இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதியாக விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.சரவணக்குமார், அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.C. கதிர்வேல், அவர்கள் ஆஜராகியும், 3 மற்றும் 4 எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்குறிஞர் திரு. E. கோபாலகிருஷ்ணன், அவர்கள் ஆஜராகியும், 1 மற்றும் 2 எதிர்மனுதாரர்கள் அசல் வழக்கில் ஒருதலைபட்சமாகியும், 5 ம் எதிர்மனுதாரர் இறந்துவிட்டபடியும் இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் சீரிய கண்காணிப்பில் இருந்து வந்து சான்றாவணங்கள் பரிசீலிக்கப்பட்டு இறுதியாக இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**<u>உத்தரவு</u>**

கட்டளை 1 விதி 10 உரிமையியல் நடைமுறை சட்டத்தின் கீழ் 5ம் பிரதிவாதி கடந்த 04.11.2022 அன்று இறந்துவிட்டார். அதற்கு பின்னிட்டு கடந்த 01.06.2023 அன்று வட்டாட்சியர் வழங்கிய வாரிசு சான்றிதழ், மனுதாரரின் மாற்றுச்சான்றிழ், குடும்ப அட்டை, ஆதார் கார்டு இணைத்துள்ளார். மேற்படி ஆவணங்களில் உள்ளபடி மனுதாரரையும் பிரதிவாதியாக சேர்த்து வழக்கு நடத்த உத்தரவிடுமாறு மனுதாரர்/3ம் தரப்பினரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>1. மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்</u>:**

1.1). மனுதாரர்/3ம் நபரின் தந்தையார் உதயகுமார் கடந்த 24.09.2021ம் தேதி இறந்துவிட்டார். பின்னிட்டு மனுதாரர் பாட்டி ரத்தினம் மட்டும் வாரிசுதாரர் என விளம்புகை பரிகாரம் கோரி வழக்கை தாக்கல் செய்துள்ளார். வழக்கில் மனுதாரர் அவரின் தாயார் 5ம் பிரதிவாதியாக வழக்கில் இருந்தார். பின்னிட்டு கடந்த 04.11.2021 தேதியன்று இறந்துவிட்டார். 5ம் பிரதிவாதியின் வாரிசுகளான மனுதாரர்/3ம் நபரையும் இந்த வழக்கில் சேர்க்க வேண்டும். இதை நிரூபிக்கும் வண்ணமாக மனுதாரர்/3ம் நபரின் ஆதார் அட்டை மற்றும் குடும்ப அட்டை, 5ம் பிரதிவாதி ஜெயக்குமாரி அவரின் வாரிசு சான்றிதழ் மற்றும் மனுதாரரின் கல்வித்துறை வழங்கிய மாற்றுச் சான்றிதழ் நகல் இணைத்துள்ளார். மனு அனுமதிக்கப்பட வேண்டும்.

**<u>2). எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம்</u> :**

2.1). மேற்படி மனு பொய்யானது மோசடியானது, சட்டப்படியும் பொருண்மைகளின் படியும் நிலைக்கத்தக்கதல்ல. எதிர்மனுதாரர்/வாதியின் மகன் உதயகுமார் வாதியின் வீட்டில் உணவு சாப்பிட்டும், பக்கத்தில் உள்ள மற்றொரு வீட்டில் வாதியின் மகன் உதயகுமார் குடியிருந்து வந்தார். இந்த நிலையில் 5ம் பிரதிவாதி ஜெயக்குமாரி, மகேஸ்வரன் என்பவருடன் வாழ்ந்து திருமணம் செய்து கொண்டு வாழ்ந்து வந்தார். அவர்களுக்கு 3 பெண் குழந்தைகள் உள்ளார்கள். வாதியின் மகன் உதயகுமார் தனியாக வீட்டில் இருப்பதை அறிந்து கொண்டு

அவருடன் நட்புடன் பழகுவது போல் நடித்து வந்தார். இந்த நிலையில் அவரது கணவர் அவரிடமிருந்து பிரிந்து சென்றுவிட்டதால் 5ம் பிரதிவாதி ஜெயக்குமாரி வாதியின் மகன் உதயகுமாருடன் தங்கி அவருடைய ஆவணங்களில் எல்லாம் உதயகுமார் கணவர் என்பதை போல் போலியாக ஏற்படுத்திக்கொண்டுள்ளார்.

2.2). 5ம் பிரதிவாதியின் 3 பெண் குழந்தைகளும் மகேஸ்வரன் என்பவருக்கு பிறந்தவர்கள் ஆவார்கள். 5ம் பிரதிவாதி ஜெயக்குமாரி மகேஸ்வரன் என்பவர்களுக்கு பிறந்தது மகள் கீர்த்தனா தேவி கடந்த 04.04.2005 வருடம் அவருடைய பிறப்பு சான்றிதழை தாக்கல் செய்துள்ளார். மனுதாரர்/ 3ம் நபர் பிறப்பு சான்றிதழ் வழக்கிற்கு எதிராக அமையும் என்று தெரிந்து கொண்டு மேற்படி மனுவினை உண்மை தண்மை மறைத்து இந்த மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

2.3). இறந்து போன உதயகுமார் மற்றும் ஜெயக்குமாரியும் ஒன்றாக திருமணம் செய்துகொள்ளாமல் வாழ்ந்து வந்தார்கள் என்பது உண்மை. அந்த பந்தத்தின் பிரதிபலனாக இருவருக்கும் குழந்தைகள் இல்லை. மேற்படி மனுதாரர்/ 3ம் நபர் ஜெயக்குமாரியின் உண்மையான கணவர் மகேஸ்வரனுக்கு பிறந்த 3ம் பெண் குழந்தையாகும். ஆகவே ஜெயக்குமாரிக்கும், மகேஸ்வரனுக்கும் பிறந்த மனுதாரர்/ 3ம் நபர் உதயகுமாருக்கு வாரிசுதாரர் இல்லை. இறந்து போன உதயகுமாருக்கு பாத்தியப்பட்ட சொத்தை அவரின் ஒரே உண்மையான வாரிசான வாதியிடமிருந்து பறிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் இந்த மனுவினை தாக்கல் செய்துள்ளார். மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

**<u>3). 3ம் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு 4ம் எதிர்மனுதாரரால் ஏற்றுக்கொள்ளப்படும் எதிருரையின் சுருக்கம்</u>** :

3.1). மேற்படி மனு பொய்யானது மோசடியானது, சட்டப்படியும் பொருண்மைகளின் படியும் நிலைக்கத்தக்கதல்ல. மனுதாரரின் தாயார் கடந்த 04.11.2021 அன்று இறந்துவிட்டார் என்றும் அதனால் மனுதாரரை இந்த வழக்கில்

சேர்க்க வேண்டும் என்றும், அதற்கு ஆதரவாக மனுதாரரின் ஆதார் அட்டை, குடும்ப அட்டை, பள்ளி கல்வி துறை வழங்கிய மாற்றுச் சான்று மற்றும் அவரது தாயாரின் வாரிசு சான்றிதழ் போன்ற அனைத்து ஆவணங்களும் சட்டப்படி நிலைக்கத்தக்கது அல்ல.

3.2) மேற்படி இவ்வழக்கின் மனுதாரரின் தாயாருக்கு கடந்த 29.06.2022 தேதியில் நீதிமன்றம் மூலமாக அழைப்பாணை அனுப்பப்பட்டு அதன் பின்னிட்டு மனுதாரரின் தாயார் எவ்வித எதிர்வழக்குரை எதுவும் தாக்கல் செய்யாமல் இறந்த பின்பு இவ்வழக்கின் மனுதாரர் தற்போது வழக்கு விவாதத்திற்காக வாய்தாவில் உள்ள நிலையில் நீதிமன்றத்தின் முன்பு தனது தரப்பை நிரூபிக்கும் பொருட்டு மனுதாரரின் பிறப்பு சான்றிதழ் எதுவும் தாக்கல் செய்யாமல் வழக்கை திசை திருப்பும் நோக்கத்தில் இந்த மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

3.3) இந்த எதிர்மனுதாரரும் மற்றும் அவரது கணவர் திரு.உதயகுமார் அவர்களும் ஒன்றாக சேர்ந்து வந்த காலத்தில் அவர் வேறு யாரையும் சட்டப்படி திருமணம் செய்து கொள்ளாமல் கடந்த 24.09.2021 அன்று இறந்துவிட்டார். இவ்வாறான சூழ்நிலையில் மனுதாரரும் இறந்துபோன உதயகுமாரின் வாரிசு என்ற அடிப்படையில் சொல்லியுள்ள அனைத்து சங்கதிகளும் அப்பட்டமான பொய்யாகும் மற்றும் மனுதாரர் இந்த மனுவுடன் தாக்கல் செய்துள்ள அனைத்து ஆவணங்களும் சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல. மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

4. இம்மனு அனுமதிக்கதக்கதா? என்பதே தீர்வுகாணப்பட வேண்டியுள்ளது.

5. இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்களும் குறியீடு செய்யப்படவில்லை.

**6. தீர்வு :-**

6.1). மனு பிரமாணப்பத்திரிக்கை, எதிருரை, மற்றும் இருதரப்பு வாதுரைகள் கவனமாக பரிசீலிக்கப்பட்டன. இரு தரப்பும் கேட்கப்பட்டது. வழக்கு

ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. அசல் வழக்கானது வாதி மற்றும் 4ம் பிரதிவாதி மட்டுமே இறந்து போன உதயகுமாரின் சட்டப்பூர்வ வாரிசுதாரர்கள் என விளம்புகை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டு இர தரப்பு வாதுரைக்காக நிலுவையில் உள்ளது. இம்மனுவானது மனுதாரர்/3 ம் நபரை வழக்கில் பிரதிவாதியாக கட்சி சேர்க்க மனுதாரர்/3 ம் தரப்பினரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6.2). எதிர்மனுதாரர்/வாதி தனது எதிருரையில் 5ம் பிரதிவாதியின் 3 பெண்குழந்தைகளும் மகேஸ்வரன் என்பவருக்கு பிறந்தவர்கள் ஆவார்கள். 5ம் பிதிவாதி ஜெயக்குமாரி மகேஸ்வரன் என்பவர்களுக்கு பிறந்தது மகள் கீர்த்தனாதேவி. கடந்த 04.04.2005ம் வருடம் அவருடைய பிறப்பு சான்றிதழ் வாதி தரப்பு அசல் ஆவணமாக தாக்கல் செய்யதுள்ளார். உதயகுமார் மற்றும் ஜெயக்குமாரியும் ஒன்றாக திருமணம் செய்துகொள்ளாமல் வாழ்ந்து வந்தார்கள் என்பது உண்மை. அந்த பந்தத்தின் பிரதிபலனாக இருவருக்கும் குழந்தைகள் இல்லை. மேற்படி மனுதாரர்/ 3ம் நபர் ஜெயக்குமாரியின் உண்மையான கணவர் மகேஸ்வரனுக்கு பிறந்த 3ம் பெண் குழந்தையாகும். ஆகவே ஜெயக்குமாரிக்கும், மகேஸ்வரனுக்கும் பிறந்த மனுதாரர்/ 3ம் நபர் உதயகுமாருக்கு வாரிசுதாரர் இல்லை என சொல்லியுள்ளார். எதிர்மனுதாரரும் மற்றும் அவரது கணவர் திரு.உதயகுமார் அவர்களும் ஒன்றாக சேர்ந்து வந்த காலத்தில் அவர் வேறு யாரையும் சட்டப்படி திருமணம் செய்து கொள்ளாமல் கடந்த 24.09.2021 அன்று இறந்துவிட்டார். இவ்வாறான சூழ்நிலையில் மனுதாரரும் இறந்துபோன உதயகுமாரின் வாரிசு என்ற அடிப்படையில் சொல்லியுள்ள அனைத்து சங்கதிகளும் அப்பட்டமான பொய்யாகும் என ஆட்சேபிக்கப்பட்டுள்ளது.

6.3). மனுதாரரின் தந்தை உதயகுமார் என்றும், அவர் கடந்த 24.09.2021ம் தேதி இறந்துவிட்டார் என்றும், மனுதாரரின் பாட்டி ரத்தினம் மட்டும் வாரிசுதாரர் என விளம்புகை பரிகாரம் கோரி அசல் வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும், மேற்படி வழக்கில் மனுதார்/3ம் நபரின் தாயார் 5ம் பிரதிவாதி கடந்த 04.11.2021 தேதியன்று

இறந்துவிட்டார் என்றும், மனுதாரர்/3ம் நபர் 5ம் பிரதிவாதியின் வாரிசு என்பதால் மனுதாரர்/3ம் நபரையும் அசல் வழக்கில் பிரதிவாதியாக கட்சி சேர்க்க வேண்டும் என மனுதாரர் மனுவில் சொல்லியுள்ளார். மேலும் மனுதாரர் இறந்துபோன உதயகுமாரின் வாரிசா இல்லையா என்பது அசல் வழக்கு தீர்ப்பின் போது தெரியவரும். நீதியின் நலன் கருதி இம்மனு அனுமதிக்கப்படுகிறது.

**முடிவாக மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.**

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, இன்று 2025 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 24-ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

Sd/M.Santhosham
**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**சூலூர்.**

**<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் :-</u>** இல்லை

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் :-</u>** இல்லை

Sd/M.Santhosham
**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**சூலூர்.**

Draft/Fair order

IA.No.5/2025 in

OS.No.67/2022

Dated:.24.09.2025

DMC, Sulur.